பக்கங்கள்: 05

THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:41 | 29.12.2023 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# விசமிகளால் தீயிடப்பட்ட படகுகள்

வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு உட்பட்ட பாலையடி மேற்கு களப்பில் இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான இரண்டு படகுகள் மற்றும் ரூபா 14 இலட்சம் பெறுமதியான வலைகள் என்பவற்றை நேற்றிரவு விசமிகள் தீ இட்டு எரித்துள்ளனர்.



இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கேவில் கடற்றொழிலாளர் கூட்டத்தில் இறால்களின் இனப்பெருக்கத்திற்காகவும் இறாலின் பருமன் வளர்ச்சியை அதிகரிப்பதற்காகவும் இறால் கூடு கட்டுவதை தற்காலிகமாக தடை செய்திருந்தது.

இதை மீறி தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டபோதும் க.மதிவாணன், க.சிவம் ஆகியோரின் இலட்சக்கணக்கான மீன்பிடி உபகரணங்களே தீக்கிரையாக்கப்பட்டன.

# கெஹலிய மீது குற்றச்சாட்டு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் அறிவுறுத்தல்களையே தாம் பின்பற்றியதாக தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் இறக்குமதியில் கைதுசெய்யப்பட்ட முதலாவது சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

நிறுவன உரிமையாளர் சார்பில் நேற்று (28) மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரமவின் முன்னால் முன்னிலையான சட்டத்தரணி ஜாலிய சமரசிங்கவே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஒரு பில்லியன் ரூபாய் பெறுமதியான மக்கள் பணத்தில் மருத்து மோசடி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்னரே அறிந்திருந்தாரா என மாளிகாகந்த நீதவான், குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வினவினார்.

தரக் குறைவான மனித இம்யூனோகுளோபுலின் உடன்படிக்கையை மேற்கொள்ளுமாறு தமக்கு உத்தரவு பிறப்பித்ததாக, தமது கட்சிக்காரர்களாக இருவர் வாக்குமூலம் வழங்கிய போதும், குற்றப்புலனாய்வுத்துறையினர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை சந்தேகநபராக பெயரிட தவறியுள்ளனர் என்று வழக்கில் சந்தேகநபர்கள் இருவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜாலிய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, முதலாம் மற்றும் இரண்டாம் சந்தேகநபர்களின் மேலதிக வாக்குமூலங்களை நேற்று (28.12.2023) சிறைச்சாலை வளாகத்தில் பதிவு செய்யுமாறு நீதவான் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விசாரணையின் ஆரம்பத்தில் பிரதி சொலிசிட்டர், ஜெனரல் லக்மினி கிரிஹாகம, குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகள் தொடர்பான மேலதிக அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

குறித்த மருந்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அதற்கான ஆங்கில நகலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அதன் சிங்கள மொழி பெயர்ப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கோரியுள்ளதாகவும் டி.எஸ்.ஜி.கிரிஹாகம தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை கைது செய்யவில்லை என்று ஆறாவது சந்தேகநபர் ஜானக சிறி சந்திரகுப்தவின் சட்டத்தரணி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னதாக தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் குப்பிகளை கொள்வனவு செய்த குற்றச்சாட்டின் பேரில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் ஜனவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயார்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் சம்மதம் தெரிவித்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். புதன்கிழமை (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அத்தகைய நடவடிக்கைக்கு கட்சி இணங்குவதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இரத்துச் செய்யப்பட்ட தனது கட்சி உறுப்புரிமையை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இடதுசாரி முற்போக்கு தேசியவாத அரசியல் சக்திகள் விட்டுச் சென்ற வெற்றிடத்தை SLFP, SLPP மற்றும் UNPயில் பெரும்பான்மையாக உள்ள 1950 களில் இருந்து காலாவதியான அரசியல்வாதிகளால் நிரப்ப முடியாது என்று ஜெயசேகர வாதிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய கூற்றுக்களை மறுத்த ஜயசேகர, SLPP ஊழல் வர்த்தகர்கள் மீது கவனம் செலுத்தும் என்று சுட்டிக்காட்டினார். இக்காலாவதியான அரசியல்வாதிகள் ஆக்கிரமித்துள்ள இடங்கள் இளைய தலைமுறை அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் பொறுப்பை ஏற்கத் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு – பொலன்னறுவை வீதி மூடப்பட்டுள்ளது

பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் காலை 10 மணிக்கு திறக்கப்பட்டதால் மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதான வீதி மறு அறிவித்தல் வரை முற்றாக மூடப்பட்டுள்ளதாக பொலன்னறுவை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வெலிகந்த, திம்புலாகலை மற்றும் மட்டக்களப்புக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக கதுருவெல புகையிரத நிலையத்திலிருந்து மானம்பிட்டி நோக்கி விசேட புகையிரத சேவை காலை 10.30 மணி முதல் இயக்கப்படவுள்ளதாக கதுருவெல நிலைய அதிபர் தெரிவித்தார்.

மட்டக் களப்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள் கிரிதலே, எலஹெர, பகமூன மற்றும் தெஹி அட்டகண்டிய வீதிகள் ஊடாக மாற்று வீதியாக பயணிக்க முடியும்.

## மன்னாரில் டெங்கு நோயாளர்கள் தொகை அதிகரிப்பு

மன்னார் மாவட்டத்தில் அதிகளவான டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் கழிவகற்றல் செயன்முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையினாலும் மழையுடனான கால நிலை நிலவி வருகின்றமையினாலும் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு டிசம்பர் மாதத்தில் மட்டும் 88 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்நோயாளர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு தொற்றாளர்கள் மன்னார் நகரத்தின் சில பகுதிகளிலும் பேசாலை, விடத்தல் தீவு பகுதிகளிலும் உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## அம்பன் அ.மி.த.க பாடசாலை அதிபரின் பிரிவு உபசார விழா

யாழ்.அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் பணியாற்றி தனது பணியிலிருந்து ஓய்வு பெற்று செல்லும் அதிபர் சோமஸ்கந்த குருக்கள் வாகீசனை கௌரவிக்கும் வைபவம் அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை சமூகத்தினரால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் சோ.வாகீசன் அவரது மனைவி ஆகியோர் பாடசாலை விழா மண்டபம் வரை மலர் மாலை அணிவிக்கப்பட்டு மேலத்தேய வாத்தியம் முழங்க அழைத்துவரப்பட்டு மங்கள சுடர்கள் ஏற்றப்பட்டு விழா ஆரம்பமானது.

வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து பாடசாலை உபஅதிபர் பானுமதி குணசிங்கம் வரவேற்பு உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் ஆகியோரது வாழ்த்துரைகள், இடம்பெற்றதை தொடர்ந்து அதிபரின் ஏற்புரையும் ஆசி



ரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# வாங்கும் வல்லமை இல்லாமையால் வீழ்ச்சியடையும் விற்பனை

எரிபொருள் பாவனையில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் (ACFSOA) தெரிவித்துள்ளது.

அகில இலங்கை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ, பண்டிகைக் காலங்களில் எரிபொருளுக்கான தேவை 50 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, நுகர்வோருக்கு கணிசமான சலுகைகளை வழங்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் (CPC) சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பை கருத்தில் கொண்டு மக்கள் தமது சொந்த வாகனங்களில் நீண்ட தூர பயணங்களை மட்டுப்படுத்தியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பொதுப் போக்குவரத்தை நாடியுள்ளனர். முந்தைய எரிபொருள் போட்டிகளுடன் ஒப்பிடும்போது, அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் சொந்த நோக்கங்களுக்காக மட்டுமே தங்கள் வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

“மூன்று சக்கரங்கள், பைக்குகள் கொஞ்சம் கொஞ்சமாக எரிபொருளை நிரப்புகின்றன. இது மாகாணங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தெளிவாகத் தெரிகிறது. அந்தக் கண்ணோட்டத்தில், எரிபொருள் விற்பனை கணிசமாகக் குறைந்துள்ளது,” பெர்னாண்டோ கூறினார்.

பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு நத்தார் பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கப்பெறாத பட்சத்தில், உள்நாட்டு முட்டைகளை 55 ரூபாவுக்கு கொள்வனவு செய்து தயாரிக்கப்படும் கேக்கின் விலையை குறைப்பது என்பது சாத்தியமற்றது என அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பம்பாய் வெங்காயம் விலை உயர்ந்ததால் பாவிப்போர் தொகை குறைந்துள்ளது. இவை எல்லாம் மேலோட்டமாக பகிரங்கப்படும் செய்திகள். இவை மட்டுமல்லாது, உடுதுணிகள், சிற்றுண்டிகள் போன்றவற்றின் விற்பனையும் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களிடம் பணப்புழக்கம் குறைவடைந்துள்ளதையே இவை வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் விலை 72 சதவீதம் உயரும் என பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் அமிந்த மெத்சிலா தெரிவித்துள்ளார்.

இதன்படி மறைமுக வரிகள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் பொருட்களின் விலை மற்றும் சேவைகளின் கட்டணங்கள் உள்ளிட்டவை கணிசமான அளவில் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்ட ஆவணத்தின்படி 122, 400 கோடி ரூபாய் (1224 பில்லியன்) கூடுதல் வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது. அதில் 72 சதவீதம் வட் மற்றும் இதர கூடுதல் வரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்படும் போது, வணிகர்கள் வாடிக்கையாளரிடமிருந்து வரியை முழுமையாக வசூலிக்க முயற்சிப்பார்கள். அதன்படி இந்த 72 சதவீத மறைமுக வரி நுகர்வோர் மீது செலுத்தப்படுவது தவிர்க்க முடியாது என அமிந்த மெத்சில்வா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட் வரி அதிகரிக்கப்பட்டதால் பொருட்களின் விலை கண்டபாட்டுக்கு உயர்ந்துள்ளது. இந்த நிலையில் அடுத்த வருடம் பொருட்களின் விலை மேலும் உயரும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரசியல் தலைவர்கள் தேர்தலைப் பற்றி அக்கறை காட்டுகின்றனர்.

# 2023 இல் 75 மில்லியன் வரை உயர்ந்த உலகளாவிய மக்கள் தொகை



இந்த ஆண்டு உலகம் பல வேறு மாற்றங்கள் மற்றும் ஏற்ற தாழ்வுகளைச் சந்தித்திருக்கிறது.

அவற்றில் முக்கியமானது உலக மக்கள் தொகை உயர்வு. இந்த ஆண்டு அதிகாரபூர்வமாக, உலகளாவிய மக்கள் தொகையானது 8 பில்லியனைக் கடந்திருக்கிறது.

குறிப்பாக இந்த ஆண்டு மட்டும் உலகளாவிய மக்கள் தொகை 75 மில்லியன் அளவுக்கு உயர்ந்திருப்பதாக அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு அமைப்பு குறிப்பிட்டிருக்கிறது. மேலும், 2023 இல் உலகளாவிய மக்கள் தொகை உயர்வானது ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறது அந்த அமெரிக்க அமைப்பு.

# புத்தாண்டு கொண்டாட்டங்களை ரத்து செய்த காபந்து பிரதமர்

காஸா, மேற்கு கரை மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், பாகிஸ்தான் காபந்து பிரதமர் அன்வாருல் ஹக் கக்கார், அந்நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டங்களை ரத்து செய்து வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கட்டார் நாட்டுக்கு ஆற்றிய சுருக்கமான உரையில், பாலஸ்தீனர்களுக்கு தோள் கொடுக்கவும் நாட்டு மக்களை நிதானத்தோடு இருக்கவும் வலியுறுத்தினார்.

“பாலஸ்தீனத்தின் தீவிரமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, நமது பாலஸ்தீன சகோதர, சகோதரிகளுக்கு தோள் கொடுக்க, புத்தாண்டுக்கான எந்தவொரு நிகழ்ச்சியையும் நடத்துவதற்கு அரசாங்கத்தால் கடுமையான தடை விதிக்கப்படுகிறது” என தெரிவித்தார்.

இஸ்ரேல் தாக்குதலில் தற்போது வரை 21,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாக பேசிய காபந்து பிரதமர், இத்தாக்குதல் வன்முறை மற்றும் அநீதியின் அனைத்து எல்லைகளையும் கடந்து விட்டதாக பேசினார்.

# விஜயகாந்துக்கு அஞ்சலிசெலுத்திய விஜய் மீது காலணி வீச்சு



மறைந்த திரைப்பட நடிகர் விஜயகாந்தின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த நடிகர் விஜய் மீது, காலணி வீசப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் சினிமாவின் ஜாம்பவானும் தே.மு.தி.க கட்சியின் தலைவருமான விஜயகாந்த், நேற்று காலை நிமோனியா தொற்று காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்தார்.

அவரின் உடல், சென்னை தீவுத்திடலில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில், இன்று மாலை முழு அரசு மரியாதையுடன் அவரின் உடல் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு திரை பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# அவுஸ்திரேலியாவில் 45 டிகிரி வெப்பநிலை

அவுஸ்திரேலியாவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் புத்தாண்டு விடுமுறை வார இறுதியில் கடுமையான வெப்ப அலையை எதிர்கொள்கிறது, வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸைத் தொடும் என்று கணிக்கப்பட்டுள்ளது, அதேநேரத்தில் நாட்டின் கிழக்கில் கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்ப அலையானது கிறிஸ்மஸ் விடுமுறையின்போது நாட்டின் கிழக்கில் 10 பேரைக் கொன்றது மற்றும் பல்லாயிரக்கணக்கானோருக்கு மின்சாரத்தைத் தட்டிச் சென்றது, மேலும் இந்த மாதத்தொடக்கத்தில் ஜாஸ்பர் சூறாவளிக்குப் பிறகு பரவலான வெள்ளம் மற்றும் சேதத்தை ஏற்படுத்தியது.

அவுஸ்திரேலியாவின் டிசம்பர்-பெப்ரவரி கோடை எல் நினோ நிகழ்வின் செல்வாக்கின் கீழ் உள்ளது, இது வழக்கமாக சராசரிக்கு மேல் பகல்நேர வெப்பநிலையைக் கொண்டு வருகிறது, மேலும் காட்டுத் தீ முதல் வெப்பமண்டல சூறாவளிகள் மற்றும் நீடித்த வறட்சி வரையிலான வானிலை உச்ச நிலையை ஏற்படுத்தும்.



# தும்பளை கிழக்கில் சாதனையாளர்கள் கௌரவிப்பு



வடமராட்சி வடக்கு தும்பளை கிழக்கில் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு தும்பளை கிழக்கு உதய சூரியன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் மாணிக்கம் மகேந்திரம், தலைமையில் நேற்று பிற்பகல் 3:00மணியளவில் உதய சூரியன் மைதானத்தில் இடம் பெற்றது.

க.பொ.த சாதாரண தரம், க.பொ.த.உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

## மதுபானங்களின் விலை அதிகரிப்பு

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மதுபானங்களின் விலையை அதிகரிக்க DCSL தீர்மானித்துள்ளது.

750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 90 ரூபாவாலும், 375 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 50 ரூபாவாலும் மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் 20 ரூபாவாலும் அதிகரிக் கப்படவுள்ளது. அரசாங் கத்தின் வட் வரி அதிகரிப் பிற்கு அமைவாக இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம்

# இந்தியப் பெருங்கடலில் இரண்டு நிலநடுக்கங்கள்

இந்தியப் பெருங்கடலில் இரண்டு நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட நில அதிர்வு நிபுணர் நில்மினி தல்தேன தெரிவித்தார்.

இதில் முதல் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆகவும், இரண்டாவது நிலநடுக்கம் 5.8 ஆகவும் பதிவானதாக அவர் தெரிவித்தார். இதன் காரணமாக இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் மாலைதீவுக்கு அருகில் இந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சியில் பன்றிக் காய்ச்சல் வைரஸ்

சீனாவில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சிப் பொருட்களில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் இருப்பதை அரசு கால்நடை மருத்துவர்கள் சங்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இறைச்சிக் களஞ்சியத்தை அழிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் கால்நடை வளர்ப்புத் தொழில் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும் என அதன் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்தார்.



# 211 இலங்கையர்கள் இஸ்ரேல் பயணம்


இஸ்ரேலில் விவசாயத் துறையில் ஒரே முறையில் ஆகக்கூடிய எண்ணிக்கையில் தொழில் வாய்ப்புக் களைப் பெற்ற, 211 பேரைக் கொண்ட மற்றுமொரு குழுவினர் 27 ஆம் திகதி விசேட விமானம் மூலம் இஸ்ரேலுக்கு பயணமானார்கள்

இஸ்ரேலுக்குச் செல்லும் இவர்களை தெளிவுபடுத்துவதற்காக விசேட நிகழ்ச்சியொன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த தொழில் வாய்ப்பின் மூலம் பெறப்படும் பணத்தின் ஊடாக தமது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதுடன், சட்ட விதிகளுக்கு அமைவாக வங்கி கட்டமைப்பு ஊடாக பணத்தை அனுப்பி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

# கொழும்புக்கு நிழல் தந்த மரங்கள் வெட்டப்படும்



கொழும்பு நகரில் அடையாளம் காணப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற மரங்கள் எதிர்காலத்தில் வெட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

பேராதனை தாவரவியல் பூங்கா மற்றும் கிளை நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் சுமார் 200 மரங்களின் கிளைகளை சமப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டார்.

## களுத்துறை சிறைச்சாலையில் கைதி மரணம்

களுத்துறை சிறைச்சாலையில் நேற்று (28) பிற்பகல் கைதி ஒருவர் மரணமானார். சுகயீனமுற்றிருந்த குறித்த அவர் வைத்தியசாலையில் இருந்து அழைத்து வரப்பட்ட பின்னர் மீண்டும் சுகயீனமடைந்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த நபர் ஹெரோயின் போதைப் பொருளுக்காக சிறைச்சாலையில் இருந்தவர் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தார்.

# வவுனியாப் பெண்கள் மத்தியகிழக்குக்கு பயணம்

வவுனியாவில் இருந்து 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக 537 பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளிற்கு வீட்டுப் பணியாளர்களாக சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் அதிகளவான ஆண்கள் மற்றும் பெண்கள் வீட்டுப் பணியாளர்கள், தொழிலாளர்களாக சவூதி, கட்டார், குவைத் உட்பட மத்திய கிழக்கு நாடுகளிற்கு மாதம் 175 பேர் வரை செல்கின்றனர்.

இதில் 90 வீதமானவர்கள் பயிற்சி அற்ற தொழிலாளர்களாகவே செல்கின்றனர். மேலும் கடந்த 2022 ஆம் ஆண்டில் தொழிலாளர்களாக இலங்கையில் இருந்து 311,263 பேர் வரை சென்றுள்ளனர்.

இதேவேளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் பெருமளவு எண்ணிக்கையானோர் தொழிலாளர்களாக மத்திய கிழக்கு நாடுகளிற்குச் சென்றுள்ளனர் என்றார்.

## யுக்திய நடவடிக்கையால் சேதம் ஏற்பட்டால் முறைப்பாடு செய்யலாம்

'யுக்திய' விசேட நடவடிக்கையின் போது ஏதேனும் சொத்து சேதங்கள் ஏற்பட்டால், அது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு பொறுப்பான அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். காவல் துறை நிவாரண நிலையம், மனித உரிமைகள் ஆணையத்தை அணுகவும் அல்லது நீதிமன்றத்தின் உதவியை நாடவும். ரூநரழுவ் காவல் துறையினர் இத்தகைய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்றால், அது அவர்களின் இலக்குகள் பற்றிய கணிசமான தகவல்களைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது அல்லது நீண்டகால சட்டவிரோத நடவடிக்கைகளைத் தீர்க்கும் அதிகாரம் அவர்களிடம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த விசேட நடவடிக்கையின் போது பொதுமக்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஏற்றுக்கொண்ட அவர், சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இரையாகாமல் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகவும் இந்த நடவடிக்கை தொடர்கிறது என்றும் வலியுறுத்தினார்.

சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அரசாங்கத்தின் கடமையை எடுத்துரைத்த அவர், இந்தப் பொறுப்பு காலதாமதமாக தீர்க்கப்பட்டதால், பெரிய அளவிலான நடவடிக்கை தேவைப்படுவதாக வருத்தம் தெரிவித்தார். இருந்தபோதிலும், மக்களின் கூட்டு நலனுக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.

# தென்னாபிரிக்க கப்டன் டெம்பா பவுமா நீக்கம்

தென்னாபிரிக்கா அணியின் கப்டன் டெம்பா பவுமா நீக்கப்பட்டார். தற்போது நடந்து வரும் இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவருக்குப் பதிலாக புதிய கப்டனாக டீன் எல்கர் நியமிக்கப்பட்டார்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ள நிலையில், இந்த மாற்றத்தை செய்துள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட் அமைப்பு.

டெம்பா பவுமா 2023 ஒருநாள் போட்டி உலகக் கோப்பை தொடருக்குப் பின் இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில்தான் பங்கேற்றார். முதல் போட்டியில் இந்திய அணி முதலில் பேட்டிங் செய்த போது 19 ஆவது ஓவரிலேயே அவருக்கு இடது தொடையில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது.

இதை அடுத்து முதல் டெஸ்ட் போட்டி முழுவதும் ஃபீல்டிங் செய்யவோ, பேட்டிங் செய்யவோ வரவில்லை. அவருக்குப் பதிலாக



மூத்த வீரர் டீன் எல் கர் கப்டன் பொறுப்பை பெற்று அணியை வழி நடத்தினார்.

இந்தியஅணியை 245 ஓட்டங்களுக்கு ஆல்-வுட் செய்த தென்னாபிரிக்கா, முதல் இன்னிங்ஸ் பேட்டிங்கில் டெம்பா பவுமா இல்லாத நிலையில் 408 ஓட்டங்கள் குவித்தது. அடுத்து இந்திய அணியை 131 ஓட்டங்களுக்கு ஆல் -அவுட் செய்து இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டி முடிந்த உடன் தென்னாபிரிக்க கிரிக்கெட் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் டெம்பா பவுமா காயம் காரணமாக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்படுவதாக கூறி இருந்தது.



மேலும், தன் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆட உள்ள டீன் எல் கரை கப்டனாக நியமித்து இருக்கிறது தென்னாபிரிக்க கிரிக்கெட் அமைப்பு. டீன் எல்கர், இந்த டெஸ்ட் தொடருடன் தான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், டீன் எல்கருக்கு கௌரவம் அளிக்கும் வகையில், அவருக்கு கப்டன் பதவியை அளித்துள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட் அமைப்பு டீன் எல்கர் முதல் டெஸ்டில் 185 ஓட்டங்கள் குவித்து தன் கடைசி டெஸ்ட் தொடரை ஏற்கெனவே மறக்க முடியாத ஒன்றாக மாற்றி இருக்கிறார். தற்போது அவருக்கு கப்டன் பதவியும் அளிக்கப்பட்டு இருக்கிறது.

## அவுஸ்திரேலிய ஓபனில் இருந்து விலகிய கரோலினா முச்சோவா

உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான கரோலினா முச்சோவா, தொடர்ந்து மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய ஓபனைத் தவிர்க்கப் போவதாக வியாழக்கிழமை தெரிவித்தார், இது ஏற்கெனவே இந்த ஆண்டு WTA இறுதிப் போட்டியில் இருந்து தன்னை வெளியேற்றியது.



“இது ஒரு புதிய சீசனின் தொடக்கத்தில் எனக்கு மிகவும் பிடித்த விடயம் அல்ல, ஆனால் துரதிஷ்டவசமாக என் மணிக்கட்டில் வலி மீண்டும் வந்தது,” என்று அவர் பேஸ்புக்கில் பதிந்துள்ளார்.

இது வெறுப்பாக இருக்கிறது, ஆனால் நான் நேர்மறையாக இருக்க வேண்டும், மீண்டும் வர வேண்டும் மற்றும் ஆண்டு முழுவதும் தயாராக இருக்க வேண்டும். 2025 அவுஸ்திரேலிய ஓபனில் சந்திப்போம், என்று 27 வயதான செக் கூறினார்.

செப்ரெம்பரில் நடந்த யு.எஸ்.ஓபனில் முச்சோவா தனது வலது மணிக்கட்டில் காயம் அடைந்தார், அங்கு அவர் அரையிறுதிக்கு வந்தார்.

இதுவரை அவரது சிறந்த பருவத்தில், முச்சோவா இந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் இறுதிப் போட்டியை எட்டினார். 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 149 ஆவது இடத்தில் இருந்து தற்போதைய எட்டாவது இடத்திற்கு முன்னேறினார். அவுஸ்திரேலிய ஓபனில் முச்சோவாவின் சிறந்த முடிவு 2021 இல் அரையிறுதி தோல்வியாகும்.

## தேடப்படும் பட்டியலில் ரஷ்ய தம்பதி

செர்ஜி பிரிடா, அவரது மனைவி வயோலெட்டா பிரிடா ஆகியோர் மாஸ்கோவின் அனுமதியின்றி அமெரிக்க சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்றதாக குற்றம் சாட்டப்பட்டது. பாரிஸ் 2024 ஒலிம்பிக்கில் அவர்கள் பங்கேற்பது இன்னும் விவாதத்தில் உள்ளது.

செவ்வாயன்று ரஷ்யா ஒரு ஜோடி ஃபென்சர்களை அதன் தேடப்படும் பட்டியலில் சேர்த்தது, அவர்கள் மாஸ்கோவின் முன் அனுமதியின்றி அமெரிக்க சாம்பியன்ஷிப்பில் போட்டியிட்டதாக குற்றம் சாட்டினர். மாநில செய்தி நிறுவனமான தாஸ் படி, செர்ஜி மற்றும் வயலட்டா பிரிடா ரஷ்ய உள்துறை அமைச்சகத்தின் தரவுத்தளத்தில் காணப்பட்டனர்.

இந்த ஜோடி “குற்றவியல் சட்டத்தின் ஒரு கட்டுரையின் கீழ்” தேடப்படுகிறது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இரண்டு விளையாட்டு வீரர்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறிப்பிடப்படவில்லை. செர்ஜி பிரிடா 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற அணி. வயலெட்டா க்ராபினா



2019 ஆம் ஆண்டு புடாபெஸ்டில் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். டாஸ்ஸின் கூற்றுப்படி, இந்த ஜோடி கலிபோர்னியாவில் வசிக்கிறது. செர்ஜி பிரிடா ரஷ்ய தேசிய காவலில் ஒரு அதிகாரி மற்றும் இராணுவத்தின் செயலில் உறுப்பினராக உள்ளார். இந்த ஜோடி அமெரிக்க சம்பியன்ஷிப்பில் போட்டியிடுவதற்கு முன்பு ரஷ்ய விளையாட்டு அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறவில்லை.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 29.12.2023 அன்று வெளியிடப்பட்டது.